**இயக்கூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 03-ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

MCOP.No. 43/2025

**ம.சா. 2**

**திரு. குருநாதன்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை ( 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

போலீசார் விபத்து குறித்து பதிவு செய்த குற்ற வழக்கில் என்னை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் விசாரித்தார்கள். நான் சொல்வது தவறு என்றும், போலீசார் தாக்கல் செய்துள்ள இறுதி அறிக்கையில் என்னை சாட்சியாக விசாரித்ததாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரியல்ல. விபத்தானது எங்கு, எப்போது நடந்தது என்றால் 26-12-2024 அன்று இரவு 11.15 மணிக்கு வடுகம்பாளையம் பிரிவில் நடந்தது. மேற்படி வடுகப்பாளையம் பிரிவானது கோபியிலிருந்து குன்னத்தூர் செல்லும் ரோட்டில் உள்ளது. நான் அங்கு எந்த வாகனத்தில் சென்றேன் என்றால் டிவிஎஸ் இருசக்கர வாகனத்தில் சென்றேன். விபத்து நடந்த இடத்தில் லைட் எதுவும் இருக்கவில்லை என்றால் சரிதான். விபத்தில் அடிபட்டு காலமான பெருமாள் விபத்து சமயத்தில் குடிபோதையில் இருந்தார் என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும், மருத்துவமனையில் மேற்படி நபரை சிகிச்சைக்கு சேர்த்த சமயம் அவர் குடிபோதையில் இருந்ததாக மருத்துவர்

குறிப்பிட்டுள்ளார் என்றால் தெரியாது. மேற்படி பெருமாள் எந்த வாகனத்தில் சென்றுகொண்டிருந்தார் என்றால் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தார். அவர் எந்த திசையிலிருந்து எந்த திசையை நோக்கி சென்றுகொண்டிருந்தார் என்றால் வடக்கிலிருந்து தெற்காக சென்றுகொண்டிருந்தார். விபத்து ரோட்டின் எந்த பகுதியில் நடந்தது என்றால் ரோட்டிற்கு கிழபுறம் நடந்தது. விபத்து எவ்வாறு நடந்தது என்றால் எனக்கு முன்பாக 30 அடி தூரத்தில் பெருமாள் சென்றுகொண்டிருந்தார் ஒரு பெரிய பைக் என்னை முந்திக்கொண்டு சென்றது அந்த பைக் தான் பெருமாள் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது. நான் சொல்வது தவறு என்றும், பைக் வரும்போது மேற்படி பெருமாள் குடிபோதையில் கீழே விழுந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. மேற்படி பெருமாள் எத்தனை ஆண்டுகளாக எனக்கு தெரியும் என்றால் எங்கள் ஊரைச் சேர்ந்தவர் தான். அடிபட்ட பெருமாளை யார் மருத்துவமனையில் யார் மருத்துவமனையில் சேர்த்தது என்றால் நான்தான் 108 க்கு போன் செய்து அனுப்பிவைத்தேன். நான் மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் அவரது தம்பிக்கு தகவல் சொன்னேன் அவர் தான் மருத்துவமனைக்கு சென்றார். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், அவ்வாறு பார்த்திருந்தால் போலீசார் என்னை சாட்சியாக விசாரித்திருப்பார்கள் எனவே நேரில் பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பெருமாள் மீது மோதியதாக கூறும் பைக்கின் பதிவு எண் தெரியுமா என்றால் கேடிஎம் பைக். அதன் பதிவு எண் 5686. முழு எண் தெரியுமா என்றால் TN 43 என்று நினைக்கிறேன். போலீசார் எந்த பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் வழக்கறிஞர் தயாரித்து கொடுத்த

பிரமாண வாக்குமூலத்தில் மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து செய்து கொடுத்தேன் என்றும், விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.